**S.T.C No.96/2022**

**Dated: 23.05.2023**

**DW: 1**

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

Name : இளையராஜா
Father 's Name: : முருகன்
Address : 2/52, சித்தவநாயக்கன்ட்டி, விளாத்திகுளம் தாலுகா
Age : 31

**புகார்தாரர்தரப்பில் குறுக்கு விசாரணை :**

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது. நான் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ஜே.சி.பி வாகனத்தில் ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறேன். எதிரியும் ஜே.சி.பி வாகனத்தில் ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறார். எதிரி எனக்கு பெரியம்மாவின் மகன் ஆவார். இந்த விபரத்தினை என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எதிரி புகார்தாரரிடம் சீட்டு எடுத்தார் என்று கூறியுள்ளது 2018-ம் வருடத்தில் ஆகும். மாதம் எனக்கு தெரியாது. சீட்டு பணம் எடுத்தபோது நானும், எதிரியின் மனைவி சரஸ்வதி என்பவரும் எதிரிக்கு ஆதரவாக கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். சீட்டு எடுத்தபோது கையொப்பம் செய்த பிணையில் என்ன விபரங்கள் எழுதப்பட்டிருந்தன என்ற விபரம் எனக்கு தெரியாது. எதற்காக கையொப்பம் செய்தோம் என்றால் காப்பீடாக கையொப்பம் செய்யக்கூறியதால் கையொப்பம் செய்தேன்.

எதிரி பணம் செலுத்த தவறும் பட்சத்தில் பிணையின்படி நானும், எதிரியின் மனைவி சரஸ்வதியும் எதிரி செலுத்த வேண்டிய தொகைக்கு கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்றால் சரிதான். கோகுலம் சீட்பண்ட்ஸ் நிறுவனம் கோவில்பட்டியில் எங்கு இயங்கி வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி மாதந்திரமாக ரூ.9,000/-த்திலிருந்து ரூ.10,000/- வரை தொகை செலுத்துவதற்கு சீட்டு பிடித்ததன்படி கடமைப்பட்வர் ஆவார். எதிரி மாதாந்திரமாக சீட்டு பணம் தொடர்பாக செலுத்தும் பணத்திற்கு சீட்டு

நிறுவனத்திலிருந்து இரசீது ஒவ்வொரு மாதமும் கொடுக்கப்படும் என்றால் சரிதான். எதிரி சீட்டு பணத்தினை முழுமையாக செலுத்திவிட்டார் என்பதற்கு சீட்டு நிறுவனத்திலிருந்து கொடுக்கப்பட்ட ஆவணத்தினை என்னிடம் காட்டியுள்ளார். அந்த ஆவணத்தினை என்னிடம் காட்டியதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பானது என்னுடைய முகவரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். அந்த அறிவிப்பானது நான் வாங்கமறுத்ததாக திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அறிவிப்பானது **பு.சா.ஆ.7** ஆகும். பு.சா.ஆ.7–ல் எதிரி செலுத்த வேண்டிய சீட்டு ரூ.1,23,180/– பணத்தினை நான் செலுத்துமாறு கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எதிரி புகார்தாரரிடம் செலுத்தவேண்டிய மொத்த சீட்டு பணத்தினை செலுத்திவிட்டார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எதிரியோ அல்லது அவரது மனைவியோ எதற்காக சாட்சியம் அளிப்பதற்கு முன்வரவில்லை என்றால் அது பற்றி என்னால் கூற இயலாது. அவர்களை சாட்சியாக விசாரணை செய்தால் வழக்கின் உண்மை தன்மை தெரியவரும் என்பதால் அவர்களை வேண்டுமென்றே சாட்சிகளாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சீட்டு எடுத்தபோது கையொப்பம் செய்த பிணையில் அதே தேதியன்றுதான் காசோலை எதிரியால் புகார்தாரரின் நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. எதிரி புகார்தாரர் நிறுவனத்திற்கு தரவேண்டிய சீட்டு நிலுவை தொகை மற்றும் வட்டி தொகை சேர்த்துதான் வழக்கு காசோலையானது எதிரியால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு காசோலையானது எதிரியால் புகார்தாரரின் நிறுவனத்திற்கு தரவேண்டிய தொகையினை ஒப்புக்கொண்டு 07.06.2022 பின்தேதியிட்டு நிரப்பி வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன்பிறகு அந்த காசோலையானது புகார்தாரரால் வசூலுக்காக செலுத்தப்பட்டு

போதிய பணமில்லை என்ற காரணத்தினால் திருப்பப்பட்ட விபரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரர் நிறுவனத்திற்கு தரவேண்டிய தொகையினை தராமல் ஏமாற்றும் நோக்கத்தில் என்னை இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எதிரி கூறியுள்ளார் என்றால் சரியல்ல. புகார்தாரர் நிறுவனத்தால் எதிரியிடமிருந்து நான் கூறிய தேதியில் நிரப்பப்படாத காசோலை மற்றும் கடனுறுதிச்சீட்டு பெற்றதாக கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல. வழக்கு காசோலை 2022-ம் வருடம் எதிரியால் புகார்தாரருக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.A. Mohammed Sadiq Hussain.,
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti